ARTICLE 04 · கட்டுரை 04 | சங்க இலக்கியமும் தமிழர் வாழ்வியலும்

Special Issue · Vol. 10, No. 03 (October 2026) · pp. 28–32

# நால்வகை நிலங்களின் பண்பாடுகள்

*The Cultural Traditions of the Four Landscapes*

**திருமதி கா. சுபா**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு)
உருமு தனலெட்சுமி கல்லூரி, காட்டூர், திருச்சிராப்பள்ளி – 620 019

***Mrs. K. Subha**, Assistant Professor, Department of Tamil (SFC), Urumu Dhanalakshmi College, Kattur, Tiruchirappalli – 620 019*

**மின்னஞ்சல்:** subhachithra92@gmail.com

### ஆய்வுச் சுருக்கம்

குடும்பம், இனம், தொழில், வழிபாடுகள், சடங்குகள், வாணிபம் எனப் பன்முகப் பரிமாணங்களோடு பழந்தமிழரின் வாழ்க்கை கட்டமைக்கப்பட்டது. மக்கள், குடும்பம் மற்றும் பழந்தமிழரின் வாழ்வியலில் கொண்டிருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கைகளும், அந்த நம்பிக்கைகள் வழிபட்ட பழக்க வழக்கங்களும், மக்களின் பொது வாழ்வியலின் நெறிகளாக அமைந்திருக்கின்றன. சங்க இலக்கியத்தில் பழந்தமிழரின் நால்வகை நிலங்களில் வாழ்ந்த மக்களின், உணவுப்பழக்க வழக்கங்கள், அவர்களின் பண்பாடுகள், அவர்களின் தொழில்கள் ஆகியவற்றை ஆராய்ந்து விளக்குவதே இக்திட்ட கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:** குறிஞ்சி; முல்லை; மருதம்; நெய்தல்; பண்பாடு

### Abstract

The life of ancient Tamils was structured across multifaceted dimensions, including family, race, occupation, worship, rituals, and trade. The unwavering beliefs held by the people within their families and daily lives, along with the customs rooted in those beliefs, served as the ethical principles of their public life. The objective of this project report is to analyze and explain the dietary habits, cultural practices, and occupations of the people who lived across the four distinct landscapes of the ancient Tamils, as depicted in Sangam literature.

**Keywords:** Kuringi; Mullai; Marutham; Neithal; Panbadu

## முன்னுரை

சமூக வாழ்க்கைத் தளத்தை நிலைநாட்டிப் பயன் கொள்வதற்காக மனிதன் தனக்குத்தானே சில வாழ்வியல் நெறிமுறைகள் மற்றும் பண்பாட்டுப் பின்புலங்களோடு இயைந்த நம்பிக்கைகளையும், பழக்க வழக்கங்களையும், தங்கள் வாழ்க்கை அனுபவங்களிலிருந்து உருவாக்கி அவற்றை வாழ்வியலோடு இணைந்து உறவாடச் செய்து கொண்டான். இந்த அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நிலத்து மக்களின் வாழ்வியலின் தனித்தன்மைகளையும், அவர்களது பண்பாட்டியல் கூறுகளின் சிறப்புத்தன்மைகளையும் ஆராயும் விதமாக இந்த ஆய்வு கட்டுரை அமைகிறது.

## குறிஞ்சி நில பண்பாடு

குறிஞ்சி என்னும் பெயர் கொண்ட மலர்களே சிறப்பானவை. கானவர் அவற்றை விரும்பி அணிவார்கள். இக்காரணங்களால் இப்பகுதி குறிஞ்சி என பெயர் பெற்றதெனக் கொள்ளலாம். மலையிலும் மலை சார்ந்த இடத்திலும்.காடுகள்

இருத்தலை பெரும் வழக்கு என்பர்.இயற்கையோடு இணைந்த வாழ்க்கை குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கை நிலையாகும்.

அந்த நிலத்தில் வாழும் மக்கள் குறவர்,நாடன், வெற்பன்,கொடிச்சி, குறமகள் என நிலம் சார்ந்த பெயர்களையே வைத்துக் கொள்வார்கள்.குறிஞ்சி நில மக்கள் வேங்கை பூ மலரும் காலத்தில் தான் அவர்களது திருமணத்தை செய்து கொள்வார்கள். வேங்கை மரத்தின் கீழ் நின்று தான் திருமணம் பற்றிய தங்களின் எண்ணங்களையும், அதைப் பற்றிய பிற கருத்துகளையும் பேசி முடிப்பார்கள். வேங்கை பூ பூக்கும் காலம் திருமணம் நடத்துவதற்குரிய காலம் என்று குறிஞ்சி நில மக்கள் கருதுகிறார்கள்.

குறிஞ்சி நில மக்கள் இலை தளைகளை ஆடைகளாக அணிந்தார்கள். பின்னர் நூலால் நெய்யப்பட்ட ஆடைகளை அணிந்தார்கள். குறிஞ்சி நில மக்கள் கழல் (காலணிகள்), தொட(வளையல்), வளையல் போன்ற அணிகலன்களை அந்நில மக்கள் அணிந்திருந்தார்கள். வேட்டையாடுதல், தினை பயிரிடுதல், விலங்கு வளர்த்தல், தேன் சேகரித்தல் போன்றவை குறிஞ்சி நில மக்களின் தொழில்களாகும்.

குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் தினை சோற்றையும், நெய்யில் வெந்த இறைச்சியையும் உண்டார்கள். அதை விருந்தினருக்கும் கொடுத்து மகிழ்ந்தார்கள்.

> “பரூஉக்குறை பொழிந்த நெய்க்கலண் வேவையொடு
> குரூஉக்கண் இடிப்பு பொம்மன் பெறுகுவிர்”
>
> (கூத்.பா.168)

தேன், கிழங்கு, மா, பலா, தினை மாவு போன்ற பச்சை உணவுகளையும், உடும்பு கறி, பன்றி கறி, கடமான் கறி, போன்ற சமைத்த உணவுகளையும், தினை, ஐவன்நெல், மூங்கிலரிசி ஆகிய உற்பத்தி உணவுகளையும் கள்ளையும் உண்டு வந்தார்கள். யானைகளின் கொம்புகளை காவு மரமாக கொண்டு தான் கொண்டு வந்த பொருட்களை அவற்றில் தொங்கவிட்டு சுமந்து வருவார்கள்.

மக்கள் உணவு உட்கொள்ளும் முறை இரண்டு வகைகளில் கூறுகிறார்கள். பச்சை உணவு, சமைத்த உணவு என பிரித்துக் கூறுகிறார்கள்.

## முல்லை நில பண்பாடு

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனப்படும். இங்கு காடு என்பது குறிஞ்சி நிலக்காடு போன்ற மரச்செறிவுடையக் காடாக இல்லாமல் “இளங்காடு”என்று சொல்லத் தகும் முறையில் அமைந்த நிலப்பகுதியாகும்.

முல்லை நில தலைவனின் பெயர் குறும்வரை, நாடன் என்றும். தலைவியின் பெயர் தோற்றல், மனைவி, கிழத்தி என்றும். முல்லை நில மக்களை கோவலர், ஆயர், அண்டர், இடையர், இடைச்சியர், ஆட்சியர், என்றும்.பெயர்களை வைத்து அழைப்பார்கள். முல்லை நில மக்கள் ஆயர் என்று அழைக்கப்பட்டனர். அவரின் முக்கிய தொழில் ஆநிரைகள் மேய்த்தலாகும். ஆயர் மகளிர் பால், மோர், தயிர் போன்றவற்றை விற்றல் ஆண் நிரைகளைக் காத்தல் போன்ற தொழில்களை விரும்பி செய்வார்கள்.

முல்லை நிலத்தில் தினை அரிசி சோற்றையும், வரகரிசி சோற்றையும், அவரை பருப்பையும், உண்டு வாழ்ந்து வந்தார்கள். விலங்குகளின் இறைச்சியை உணவாகவும் உட்கொள்ளுவார்கள். இந்த நிலத்தில் வரகு, சாமை, முதிரை போன்ற பயிர்களை பயிர் செய்தார்கள்.

"இருங்கிளை ஞெண்டின் சிறு பார்ப்பு அன்ன
பசுந்தினை முரல் பாலொடும் பெறுகுவீர்"

(பெரும்.பா.167)

பசுவியிடமிருந்து கிடைக்கும் பாலை மோர், தயிர், வெண்ணெய், நெய் முதலியவற்றை தயாரித்து. பண்டமாற்று முறையில் பிற நாட்டுக்கு கொடுத்து அவர்களிடமிருந்து பொன் வாங்காமல் அதற்கு பதிலாக நெல், எருமை பசு, பசுவின் கன்றுகளை பெற்று வருவார்கள். முல்லை நிலத்து மக்கள் ஆநிரைகளை மேய்த்ததை மரபாகக் கொண்டு வாழ்ந்தார்கள்.

சிறுபாணாற்றுப்படையில் ஓய்மானாட்டு முல்லை நிலம், அரும்புகளை உடைய அவரை கொடிகள் பவளம் போன்ற பூக்களை பூத்திருக்கும். கரிய அறும்பினை உடைய மாயாக்கள் திரண்ட மையிலின் கழுத்துப் போன்ற பூக்கள் பூத்திருக்கும். மொசு மொசுண்டைக் கொடி கொட்டம் போன்ற பூக்களுடன் விளங்கும். வளவிய குலையினை உடைய காந்தள்கள் கைவிரல்களைப் போலப் பூத்திருந்தன. கொல்லையிடித்து நெடிய வழிகளில் இந்திர கோபம் என்னும் பூச்சிகள் உந்தன. இவை கார்காலத்தை உணர்த்தியது. முல்லைக் கொடிகளில் முல்லை பூக்கள் மலர்வதால் பேரழகுடன் காணப்பட்டது.

பெரும்பாணாற்றுப்படையில் தொண்டை நாட்டு முல்லை நிலம், வரகுக்கற்றை முதலியவற்றால் வேயப்பெற்ற குடிசை குரம்பை எனப்பட்டது. அக்குரம்பையின் உள்ளே நுழையச் சிறிய வாயில் இருக்கும். அவ்வாயிலில் கழிகளாற்கட்டப்பட கதவு இருக்கும். குடிசையின் கூரையை தாங்கி நின்றவை குரிய கால்கள். அக்கால்களில் ஆடுகள் நின்று உன்னுமாறு தழைகள் கட்டப்பட்டிருக்கும். சிற்றூரில் வளைந்த முகத்தினை உடைய செம்பரி ஆடுகளுடனே வெள்ள ஆடுகளும் தங்கி வாழ்ந்தன.

முல்லைக்கலியில் முல்லை நிலத்தில் இயல்பாக இருப்பது போன்று தலைவன் பாசறை செல்லுதல் தலைவி பிரிவு துயரத்தில் வருந்துதல் என்பது போல அல்லாமல் சற்று மாறுபட்டதாக இருக்கும். குரவையாடுதல், திருமாலை வாழ்த்துதல், பாண்டிய மன்னனை வாழ்த்துதல், ஏறு தழுவுதல் போன்ற புதிய செய்திகள் இடம் பெறுகின்றன.

முல்லைக்கலியில் வாழும் மக்கள் பல பழக்கவழக்கங்களை கையாளுகின்றனர். அவற்றின் முக்கியமான ஒரு பழக்கம் ஏறு தழுவுதல் நடைபெற்ற பின்பு திருமணம் நடைபெறுதல் இந்த நிகழ்வின் மூலம் முல்லைக்கலியில். தலைவரின் வீரம் வெளிப்படுகிறது.

## மருத நிலத்தின் பண்பாடுகள்

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனப்படும். இம் மருத நிலம் ஆற்றுப்பாச்சல், ஏரிபாய்ச்சல் உள்ள நிலப்பகுதியாகும்.

மருதநில மக்கள் வயல்களை உழுதல், நெல் விதைத்தல், நாற்று நடுதல், களை எடுத்தல், வயல்களுக்கு நீர் பாய்ச்துதல், அறுவடை செய்தல், கடா விடுதல் முதலிய பயிர் தொழில்கள் தொடர்பான தொழில்களை செய்து வருகிறார்கள்.

மேலாண்மை தொழிலினால் பெறப்படும் உணவுப் பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு வண்டிகளில் எடுத்துச் செல்வார்கள். அவற்றை வெளியூர் சந்தைகளுக்கு கொண்டு போய் விற்று வருவது உழவுத் தொழிலை நிறைவு செய்யும் ஒரு தொழிலாகும். அவ்வாறு வெளியூருக்கு செல்லும் பொழுது பல வண்டிகளில்

கூட்டமாகவும் செல்வார்கள் இரவு பொழுதில் உறங்காமல் பயணம் செய்வதால் ஏற்படும் களைப்பை போக்குவதற்காகப் பாடல்களை பாடி செல்வார்கள்.

மருத நில மக்கள் தங்கள் திருமணங்களை எளிமையாகவும் சமய சடங்குகள் இன்றி நடத்தி வந்தார்கள். மருத நிலத்தில் பெண்கள் திருமணம் ஆன பின்பு தான் தன் கூந்தலில் பூவை அணிந்து கொள்வார்கள். பெண்கள் திருமணம் ஆனவர்கள் என்பதற்கு பூ வைப்பதே சான்றாகும்.

புதிய ஆடைகளை அணிந்து, ஆபரணங்களையும் அணிந்து, மலர் மாலைகளை அர்ச்சனை செய்து. திருமணத்தின் போது பிராமணர் வழிகாட்டியபடி தீயை வலம் வருதல் போன்ற சடங்குகள் இருந்தன.

மருத நில மக்களின் உணவுகளில் இவர்கள் அதிகம் அரிசி உணவை பயன்படுத்தினார்கள், அரிசி, கரும்புச்சாறு, மீன், நண்டு, காய்கறிகள், கள், கோழி போன்றவை மருத நில மக்களின் உணவுகள் ஆகும்.ஒருமுறை உற்பத்தி செய்த நெல் ஆண்டு முழுவதும் பசியாற அவர்களுக்கு போதுமானதாக இருக்கும். குழம்பிற்கு தேவையான கறி, மீன், காய்கள் இவற்றை எல்லாம் இவர்களே வளர்த்தார்கள். ஏரி, குளம் குட்டைகளில் தண்ணீரில் மீன்கள் வளர்த்து தேவையான போது அவற்றை பிடித்து உணவாக்கி உண்டார்கள் உழவர் வீடுகளில் நெற்றோடும் தாம் வளர்த்த கோழிக்கறி குழம்பு விரும்பி உண்ணும் உணவாக இருந்தது.

> “அவைப்புமாண் அரிசி அமலைவெண்சோறு
> குவைத் தாள் அல்லன் கலவையொடு பெறுகுவிர்”
>
> (சிறு.பா.194)

இல்லங்களில் தமக்கு தேவையான கோழிகளை வளர்த்து அவற்றில் இருந்து கிடைக்கும் கோழி முட்டை, கறி போன்றவற்றை உணவாக்கி உண்டார்கள். நெற்ச்சோற்றுடன் நண்டு பீர்க்கங்காய் கலந்து சமைத்து மாமிச உணவுகள் மருதநில இல்லங்களில் தடையின்றி கிடைக்கும். கரும்புச்சாறு, கரும்புச்சாற்றை கட்டியாக்கி காய்ச்சி அதை உணவாக விருந்தினருக்கு அளித்தார்கள்.

## நெய்தல் நில பண்பாடு

நெய்தல் நில மக்கள் கடலும் கடல் சார்ந்த பகுதியில் வாழ்பவர் ஆவார்கள்.சேர்ப்பன், வரதவர், துறைவன், புலம்பன் இவர்கள் நெய்தல் நில தலைவர்கள் ஆவார்கள். நுளைச்சியர், நுளையர், பரதவர், பரத்தியர், வலையர், வளர்ச்சியர் இவர்கள் நெய்தல் நிலத்தின் தலைமகள் ஆவர்கள்.

மீன் பிடித்தல், உப்பு எடுத்தல், கடல் வணிகம், சங்கு வளையல் செய்தல், முத்து எடுத்தல், மீன் பிடித்தல் போன்ற தொழில்கள் நெய்தல் நிலத்து மக்களின் தொழில்களாகும்.

பரதவ மரபில் ஆண்மகன் தான் விரும்பும் கண்ணியை மணந்து கொள்வதற்கு பரிசாக பொண்ணும் திரண்ட பொருளும் அளவற்ற அணிகலன்களும் கொடுக்க வேண்டும். ஆடவன் ஒருவன் தான் விரும்பிய மங்கை ஒருத்தியை மணந்து கொள்ள கடினமான வினை கூட செய்து வெற்றி பெறுவான்.நெய்தல் நில மக்கள் இறைவனுக்கு படைப்பது போன்று தன்னை நாடி வருபவர்களுக்கும். தேக்கிலையில் புல்லரிசி சோற்றைக் கருவாடு சேர்த்து தருவார்கள்.

நெய்தல் நில மக்கள் கடலிற வயலாமை இவற்றை பக்குவப்படுத்தி உண்டார்கள். பனங்கள் நெல்லரிசிக் கள் போன்றவற்றை உண்டார்கள். நெய்தல் நில மக்கள் மீன்

உப்பு மற்றும் கடல்வாழ் உயிரினங்களை முக்கிய உணவாக கொண்டிருந்தார்கள். மீன் மற்றும் உப்புக்கு பண்டமாற்றம் உடன் கிடைக்கும் மற்ற உணவு பொருட்களையும் சேர்த்து உண்பார்கள்.

## முடிவுரை

சங்க இலக்கியங்கள் காட்டும் நால்வகை நிலங்களின் பண்பாடுகள், தமிழர்களின் வாழ்வியல் நெறிகளையும் இயற்கையோடு இயைந்த வாழ்வையும் உலகிற்கு பறைசாற்றுகின்றன. குறிஞ்சியின் வீரமும் காதலும், முல்லையின் பொறுமையும் கள்ளமில்லா வாழ்வும், மருதத்தின் உழைப்பும் நாகரிக வளர்ச்சியும், நெய்தலின் கடலோடிய வீரமும் விடாமுயற்சியும் வெறும் நிலத்தின் தன்மைகள் மட்டுமல்ல; அவை அந்தந்த நிலத்து மக்களின் இரத்தத்தில் ஊறிய பண்பாட்டு அடையாளங்கள் ஆகும். நிலத்தின் தன்மைக்கேற்ப மக்களின் வாழ்வாதாரமும், வழிபாட்டு முறைகளும், கலைகளும் மாறுபட்டிருந்தாலும், அவை அனைத்தும் ‘திணைக்கோட்பாடு’ என்ற உன்னத ஒழுக்க நெறியால் பிணைக்கப்பட்டிருந்தன என்பதை பத்துப்பாட்டு நமக்கு உணர்த்துகிறது. எனவே, இந்நூல்கள் காட்டும் நால்வகை நிலத்து மக்களின் அறநெறி, விருந்தோம்பல் மற்றும் இயற்கை சார்ந்த வாழ்வியல் பண்பாடுகளைப் போற்றிப் பாதுகாப்பதே இன்றைய தலைமுறையினராகிய நமது கடமையாகும்.

## துணைநூற் பட்டியல்


1. கதிர், பத்துப்பாட்டு, சாரதா பதிப்பகம், சென்னை-14
2. சாமி சிதம்பரனார், பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், கணபதி பப்ளிகேஷன், சென்னை-600005
3. தேவநேயப்பாவாணர், பண்டைத் தமிழ் நாகரிகம், கணபதி பப்ளிகேஷன், சென்னை – 600053


## References


1. **Kathir** – *Pathuppattu*, Sharadha Pathippagam, G-4, Shanthi Apartments, 3, Krishnapuram Street, Royapettah, Chennai - 600014
2. **Sami Chidambaranar** - *Pazhanthamizhar Vaazhvum Valarchiyum* , Ganapathi, Publication, Chennai - 600005
3. **Devaneya Pavanar** - *Pandai Thamizh Naagarigam* , Ganapathi Publication, Chennai - 600053